**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 163/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW2 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Manokar |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 29th day of July, 2025.

**(Accused is present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது தம்பிநாயுடு பாளையத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் எஸ்.டி. இருளர் சமூதாயத்தை சேர்ந்தவர். 2003 முதல் எதிரியின் ரைஸ்மில்லில் 13 வருடங்களாக வேலை பார்த்தோம். அது தச்சூர் கூட்ரோட்டில் உள்ளது. என்னுடன் என் மனைவி கங்கம்மாள், என் மகள் கோவிந்தம்மாள் வேலை பார்த்தோம்.

ரைஸ்மில்லில் தொட்டியில் நெல் போடுவோம், வேக வைப்போம், காய வைப்போம். வாரி உள்ளே நெல் அரைத்து அரிசியாக்குவோம். வாரத்திற்கு 300 ரூபாய் கொடுப்பார்கள். 2003ல் வேலைக்கு சேரும் போது ரூபாய் 10 ஆயிரம் அட்வான்ஸ் கொடுத்தார். சுமார் 12, 13 வருடங்களாக 2014 அல்லது 2015 வரை வேலை பார்த்தோம். என்னுடன் என் தம்பி மாரி, ரவி ஆகியோர் வேலை செய்தோம். மாரியுடன் மாரியின் மனைவி விஜயா மற்றும் ரவியின் மனைவி வேலை பார்த்தார்கள். அவர்களுக்கும் அட்வான்ஸாக ரூபாய் 10 ஆயிரம் வாங்கிக்கொண்டு வேலை பார்த்தார்கள். சரியாக சம்பளம் கொடுக்காமல், ஊருக்கு சென்றால் ஒருவரை அனுப்புவார்கள், உடனடியாக வர சொல்வார். வெளியே போனாலும் ரைஸ்மில்லுக்கு அழைத்து வந்துவிடுவார். ரைஸ்மில்லில் உள்ள கொட்டகையில் தங்கியிருந்து வேலை செய்தோம். கொத்தடிமைகளிலிருந்து வெளியே வருவதற்காக ஒருவர் போன் நம்பர் எங்கள் ஜாதியை சேர்ந்தவர்கள் எழுதி கொடுத்தார்கள். நாங்கள் போன் செய்து பேசினோம். அவர்கள் விலாசம் கேட்டார்கள். நேரடியாக வந்து பார்த்தார்கள். பொன்னேரி ஆர்.டி.ஓ. கவரப்பேட்டை போலீசார் வந்தார்கள். பொன்னேரி ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 163/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW3<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Tmt. Gangammal |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 29th day of July, 2025.

**(Accused is present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது தம்பிநாயுடு பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்.டி. இருளர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியும். நானும், என் கணவர், என் மகள் கோவிந்தம்மாள், தச்சூரில் உள்ள ஜெயபிரகாஷ் ரைஸ்மில்லில் வேலை செய்து வந்தோம். நெல் அவிக்கும் வேலை, காய வைத்து, நெல்குத்தும் வேலை செய்து வந்தோம்.

வாரத்திற்கு ஒரு முறை 300 ரூபாய் கொடுப்பார்கள். அட்வான்ஸ் பணமாக என் கணவருக்கும், எனக்கும் சேர்த்து ரூபாய் 10 ஆயிரம் கொடுத்தார்கள். என்னுடன் கிருஷ்ணவேணி, ரவி, மாரி, விஜயா ஆகியோர் வேலை செய்தார்கள். அவர்களுக்கும் எங்களை போலவே தான் சம்பளம் கொடுத்தார்கள். அந்த ரைஸ்மில்லில் கொட்டகை போட்டு கொடுத்தார்கள். அங்கேயே தங்கி வேலை செய்தோம். கடைக்கு மளிகை சாமான் செல்லவேண்டும் என்றால் ஒருவரை தான் அனுப்புவார். நல்லது, கெட்டதுக்கு வெளியே செல்ல கூட அனுப்பமாட்டார். பொன்னேரியிலிருந்து அதிகாரிகள் வந்தார்கள். கவரப்பேட்டை போலீசார் வந்து எங்களை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.